புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

***

எண்.04/போ.துறை/2014 தேதி :19-06-2014

## செய்திக் குறிப்பு

## போக்குவரத்துத் துறையை பொதுமக்கள் இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக அணுகி பயன்பெறலாம்

புதுச்சேரி அரசு போக்குவரத்துத் துறையில் வாகனப் பதிவு, வாகன ஓட்டுநர் உரிமம், வாகனங்களுக்கு பல்வேறு பர்மிட் வழங்குதல், வாகனங்களுக்கு உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை பொருத்துதல், வாகனங்களின் தகுதியை ஆய்வு செய்தல் போன்ற பல பணிகள் நடந்து வருகின்றன. தற்போது குறைந்த அளவு பணியாளர்கள் இருந்தபோதிலும் மேற்கண்ட பணிகள் தடையின்றி நடைபெறுவதற்கு போக்குவரத்துத் துறை தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், மேற்கண்ட எல்லா பணிகளையும் உடனடியாக செய்து தருவதாக தவறான வாக்குறுதிகளை பொதுமக்களுக்கு அளித்து இடைத்தரகர்கள்போல் செயல்படும் சிலர் போக்குவரத்துத் துறை பணிகளுக்கு இடையூறு செய்து வருவதுடன், பணியாளர்களை மிரட்டும் வகையிலும் நடந்துகொள்வதாக தெரிகிறது. போக்குவரத்துத் துறை ஊழியர்கள் அனைத்துப் பணிகளையும் உடனுக்குடன் செய்துதரும் இச்சூழலில் பொதுமக்களிடம் தவறான தகவல் தெரிவித்து அன்றாட அலுவலக பணிகளுக்கு இடையூறு செய்யும் நபர்கள் மீது உரிய சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. எனவே, வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் நேரிடையாக அலுவலக அதிகாரிகளிடமோ அல்லது பணியாளர்களிடமோ அணுகி தங்களது வாகனம் தொடர்புடைய பணிகளை நிறைவு செய்துக்கொள்ளலாம் என்றும் போக்குவரத்துத் துறைக்கு தக்க ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் புதுச்சேரி போக்குவரத்துத் துறை பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறது.

GOVT. OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி. சுந்தரேசன்)

போக்குவரத்து ஆணையர்